ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 1.8 – கொங்கலர்ந்த

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 1.8 – கொங்கலர்ந்த

‡ கொங்கலர்ந்த மலர்க் குருந்தம் ஒசித்த ⋆
கோவலன் எம் பிரான் ⋆
சங்கு தங்கு தடம் கடல் துயில் கொண்ட ⋆
தாமரைக் கண்ணினன் ⋆
பொங்கு புள்ளினை வாய் பிளந்த ⋆
புராணர் தம் இடம் ⋆
பொங்கு நீர்ச் செம் கயல் திளைக்கும் சுனைத் ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ‖ **1.8.1** ‖

‡ பள்ளி ஆவது பாற்கடல் அரங்கம் ⋆
இரங்க வன் பேய் முலை ⋆
பிள்ளையாய் உயிர் உண்ட எந்தை ⋆
பிரான் அவன் பெருகும் இடம் ⋆
வெள்ளியான் கரியான் ⋆
மணி நிற வண்ணன் என்றெண்ணி ⋆
நாள் தொறும் தெள்ளியார் வணங்கும் மலை ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ‖ **1.8.2** ‖

நின்ற மா மருதிற்று வீழ ⋆
நடந்த நின்மலன் நேமியான் ⋆
என்றும் வானவர் கை தொழும் ⋆
இணைத் தாமரை அடி எம் பிரான் ⋆
கன்றி மாரி பொழிந்திடக் ⋆

கடிதாநிரைக்கிடர் நீக்குவான் ⋆
சென்று குன்றம் எடுத்தவன் ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ॥ **1.8.3** ॥

பார்த்தற்காய் அன்று பாரதம் கை செய்திட்டு ⋆
வென்ற பரம் சுடர் ⋆
கோத்தங்காயர் தம் பாடியில் ⋆
குரவை பிணைந்த எம் கோவலன் ⋆
ஏத்துவார் தம் மனத்துள்ளான் ⋆
இடவெந்தை மேவிய எம் பிரான் ⋆
தீர்த்த நீர்த் தடம் சோலை சூழ் ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ॥ **1.8.4** ॥

வண் கையான் அவுணர்க்கு நாயகன் ⋆
வேள்வியில் சென்று மாணி ஆய் ⋆
மண் கையால் இரந்தான் ⋆
மராமரம் ஏழும் எய்த வலத்தினான் ⋆
எண் கையான் இமயத்துள்ளான் ⋆
இருஞ்சோலை மேவிய எம் பிரான் ⋆
திண் கைம்மா துயர் தீர்த்தவன் ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ॥ **1.8.5** ॥

எண் திசைகளும் ஏழ் உலகமும் வாங்கிப் ⋆
பொன் வயிற்றில் பெய்து ⋆
பண்டோர் ஆல் இலைப் பள்ளி கொண்டவன் ⋆
பால் மதிக்கிடர் தீர்த்தவன் ⋆
ஒண் திறல் அவுணன் உரத்துகிர் வைத்தவன் ⋆
ஒள் எயிற்றொடு ⋆

திண் திறல் அரி ஆயவன் ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ॥ **1.8.6** ॥

பாரும் நீர் எரி காற்றினொடு ⋆
ஆகாசமும் இவை ஆயினான் ⋆
பேரும் ஆயிரம் பேச நின்ற ⋆
பிறப்பிலி பெருகும் இடம் ⋆
காரும் வார் பனி நீள் விசும்பிடைச் ⋆
சோரு மா முகில் தோய் தர ⋆
சேரும் வார் பொழில் சூழ் ⋆
எழில் திருவேங்கடம் அடை நெஞ்சமே ॥ **1.8.7** ॥

அம்பரம் அனல் கால் நிலம் ⋆
சலம் ஆகி நின்ற அமரர் கோன் ⋆
வம்புலா மலர் மேல் ⋆
மலி மட மங்கை தன் கொழுநன் அவன் ⋆
கொம்பின் அன்ன இடை மடக் குற மாதர் ⋆
நீள் இதணம் தொறும் ⋆
செம் புனம் அவை காவல் கொள் ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ॥ **1.8.8** ॥

பேசும் இன் திருநாமம் எட்டெழுத்தும் ⋆
சொல்லி நின்று பின்னரும் ⋆
பேசுவார் தமை உய்ய வாங்கிப் ⋆
பிறப்பறுக்கும் பிரான் இடம் ⋆
வாச மா மலர் நாறு வார் ⋆
பொழில் சூழ் தரும் உலகுக்கெல்லாம் ⋆

தேசமாய்த் திகழும் மலைத் ⋆
திருவேங்கடம் அடை நெஞ்சமே ॥ **1.8.9** ॥

‡ செம் கயல் திளைக்கும் சுனைத் ⋆
திருவேங்கடத்துறை செல்வனை ⋆
மங்கையர் தலைவன் கலிகன்றி ⋆
வண் தமிழ்ச் செஞ்சொல் மாலைகள் ⋆
சங்கை இன்றித் தரித்துரைக்க வல்லார்கள் ⋆
தஞ்சம் அதாகவே ⋆
வங்க மா கடல் வையம் காவலர் ஆகி ⋆
வான் உலகாள்வரே ॥ **1.8.10** ॥

அடிவரவு — கொங்கு பள்ளி நின்ற பார்த்தற்கு வண்கையான் எண்திசைகள் பார் அம்பரம் பேசுமின் செங்கயல் தாய்

கொங்கலர்ந்த முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்